நெசவாளர் பிரச்னையை ஒரு பொருளாதாரக் கண்ணோட்டத்தோடு பார்க்கவேண்டும். அரசியல் கண்ணோட்டத்தோடு பார்க்கக்கூடாது என்பது இந்த அரசின் கொள்கையாகும். நெசவாளர்கள் என்னென்ன துணிகளை நெய்யலாம், காலத்திற்கேற்றவாறு தரத்தை உயர்த்தலாம் என்று அறிவதற்கு ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒரு பயிற்சிப் பள்ளி நிலையத்தை நாம் ஏற்பாடு செய்து வேண்டிய ரகங்களை ஆங்காங்கு நெய்ய கற்றுத் தருவதற்கு ஏற்பாடு செய்து இருக்கிறோம்.

எங்கள் மாவட்டம் பின்தங்கிய மாவட்டம் பரமக்குடியில் சென்றால் அங்கே ஒரேமாதிரியான சேலையைத்தான் அந்தக் காலத்திலிருந்து நெய்கிறார்கள். அவர்களுக்கு டவல், நாப்கின் போன்றவற்றை உற்பத்தி செய்வதற்கும், பயிற்சி கொடுப்பதற்கும் மட்டும் ரூ. 4 லட்சம் ரூபாய் கொடுத்து இருக்கிறோம். ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒன்று ஆரம்பிப்பதற்கு முயற்சி எடுத்து வெற்றி பெற்று இருக்கிறோம். நாங்கள் ஆரம்பித்த காரணத்தால் கனம் திரு. விநாயகத்திற்கு கோபம் வந்தால் கோபம் வரக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன்.

Dye chemicals for handloom Industry

* 274 Q.—THIRU N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(a) whether any plant for the manufacture of Dye Chemicals used in Handloom Industry is to be set up in this State; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: (அ) &(இ) மத்திய அரசு, தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கூட்டு நிறுவனத்திற்கு ஆண்டொன்றுக்கு 3,300 டன் சோடியம் ஹைட்ரோசல்பைட் உற்பத்தி செய்யக்கூடிய தொழிற்சாலை ஒன்றை நிறுவ பூர்வாங்க அனுமதி வழங்கியுள்ளது. இப்பொருள் கைத்தறி தொழில்களில் பெரிதும் உபயோகிக்கப்படும் சாயங்கள் தயாரிக்க உதவும் முக்கிய மூலப் பொருளாகும்.

திரு. என். எஸ். வி. சித்தன்: இந்தத் தொழிற்சாலை எப்பொழுதிலிருந்து உற்பத்தி தொடங்க இருக்கிறது? அண்மையில் சில மாதங்களுக்கு முன்பு சாய ரசாயன பொருள்கள் இறக்குமதி சம்பந்தமாக ஊழல்கள் நடைபெற்றிருக்கின்றன என்று பத்திரிகையில் செய்தி வந்திருக்கிறதே? அது உண்மையா? அதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது?

மாண்புமிகு திரு. செ. மாதவன்: அந்தத் தொழிற்சாலை துவங்குவது பற்றி ஏதாவது தவறு நடந்திருக்கிறது என்று சொன்னால், அதைப்பற்றி தனியாகக் கேள்வி போடவேண்டும். முன்பே கேள்வி போட்டார்கள், பதில் சொல்லியிருக்கிறேன். அதைப்பற்றி தனியாகக் கேள்வி கேட்டால், மீண்டும் அதைச் சந்திப்பதற்குத் தயார். இதைப் பொறுத்த அளவிற்கு நம்முடைய நாட்டிற்கு டெக்ஸ்டைல் இண்டஸ்ட்ரிக்குத் தேவையான, குறிப்பாக கைத்தறிக்குத் தேவையான தொழிற்சாலைகளுக்காக நம்முடைய அரசாங்கம் ரூ. ஒரு கோடி முதலில் ஒரு தொழிற்சாலை ஆரம்பிப்பதாக முடிவு செய்திருக்கிறது. அதற்கு லெட்டர் ஆஃப் இன்டென்டு, முன் அனுமதி நமக்கு

இப்பொழுது கிடைத்திருக்கிறது. அந்தத் தொழிற்சாலையை எங்கே தொடங்கலாம் என்பது வசதிகளைப் பற்றி ஆராய்ந்து தொடங்கப்படும். மத்திய அரசுக்கு அனுப்பி, மத்திய அரசு லைசென்ஸ் வழங்கியதற்குப் பின்னால் தொடங்கப்படும்.

திரு. எம். சுரேந்திரன் : கைத்தறித் தொழிலுக்கு மிகத் தேவையானது ரசாயனப் பொருள்கள் உற்பத்தி. சேலம் ஜில்லா கைத்தறித் தொழிலுக்கு மிகப் பிரக்யாதி பெற்ற இடம். அங்கே மிக அதிகமாக நெசவுத் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். ஆகவே, அந்தத் தொழிற்சாலை சேலம் ஜில்லாவில் தொடங்கப்படுமா ? எவ்வளவு டன் உற்பத்தியாகும்?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : எந்த மாவட்டத்தில் தொடங்கப்படும் என்பதை ஆராய்ந்து முடிவு செய்யலாம். இது எல்லா மாவட்டங்களுக்கும் தேவைப்படுகின்ற பொருளாகும். இப்பொழுது இந்த அரசாங்கத்தின் கொள்கை புதிய தொழிற்சாலைகளையெல்லாம் பின்தங்கிய பகுதிகளை நோக்கி, கிராமங்களை நோக்கிச் செல்லவேண்டும் என்று முடிவு செய்திருக்கிறோம். ஆகவே, இதுபற்றி ஆலோசித்ததற்குப் பின்னால் முடிவு எடுக்கப்படும்.

ஹாஜி ம. மு. பீர்முஹம்மது : பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டம் இயந்திரத் தொழில்களைப் பொறுத்தவரையில் பிற மாவட்டங்களைவிட பின்தங்கியிருக்கின்ற காரணத்தினால், நிறைய கைத்தறித் தொழிலாளர்கள் அங்கே இருக்கின்ற காரணத்தினால், என்னுடைய தொகுதியைச் சேர்ந்த மேலப்பாளையத்தில் ஏறத்தாழ 20,000 கைத்தறிகள் இருக்கின்ற காரணத்தினால், அந்தத் தொழிற்சாலையை அரசு அங்கே துவக்குமா ?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. சித்தன் கேட்ட கேள்விக்கு இப்பொழுது அமைச்சர் அவர்கள் பதில் அளித்தாரே ? மறுபடியும் அதைப் பற்றியே கேட்டால் எப்படி ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கனம் அங்கத்தினர் அவர்கள் தொகுதி மக்களிடம் கொண்டிருக்கக்கூடிய அன்புக்கு நான் மகிழ்ச்சி தெரிவித்துக் கொள்கிறேன்.

Naphtha Cracker Plant in Manali

* 275 *Q.*—Thiru N. S. V. CHITHAN : Will the Hon. the Minister for Industries be pleased to state—

(*a*) whether there are proposals under the consideration of the Government to start a Naphtha Cracker Plant in Manali near Madras; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) &(இ) தமிழ்நாட்டு அரசுக்கு முற்றிலும் சொந்தமான தமிழ்நாடு தொழில் வளர்ச்சி கூட்டுறவு நிறுவனம் ரசக் கற்பூரத்தைலத்தை அடிப்படையாகக் கொண்ட தொழிற்சாலை ஒன்று தமிழ்நாட்டில் தோதான ஒரு இடத்தில் நிறுவ அனுமதி கேட்டு மனு செய்திருக்கிறது. அந்த மனு இந்திய அரசாங்கத்துக்குச் சிபாரிசு செய்யப்பட்டிருக்கிறது.